## ஊர்காவற்றுறை பிரதேச சபை

## யாழ்ப்பாணம் மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களினை சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 20 பெப்ரவரி 2020 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 29 யூன் 2020 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 06 செப்தெம்பர் 2020 ஆந் திகதியும் தவிசாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து ஊர்காவற்றுறை பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலையினை தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | பிரதேசசபைக்குச் சொந்தமில்லாத ரூபா 5,925,000 ஆன விளையாட்டு மைதானம் காணி கட்டடங் களின் பெறுமதியினுள் உள்ளடக்கப்பட்டுள்ளமையினால் சொத்துக்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் அதிகரித்து காட்டப்பட்டுள்ளது. | பாராதீனப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | மைதானக்காணியின் உரிமையினை பாராதீனப்படுத்த உரிய நடவடிக்கைகள் சபையினால் எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | உரிமை மாற்றம் செய்யப்படாத ரூபா 15,121,600 ஆன 04 வாகனங்கள் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையினால் சொத்துக்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளது. | 04 வாகனங்கள் மட்டுமே இதுவரை உரிமை மாற்றம் செய்யப்படாமல் உள்ளன. | வாகனங்கள் உரிமை மாற்றம் செய்வதற்குரிய நடவடிக்கைகள் சபையினால் எடுக்கப்படல் வேண்டும். |

## 1.4 இணக்கமின்மைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2018 ஆம் ஆண்டின் 19 இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் | | | |
| | உப பிரிவு 16(2) | சபையினால் வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதிக்கூற்றுக்களுடன் சமா்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இனிவரும் காலங்களில் வருடாந்த செயலாற்று அறிக்கையானது நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்படும். | உரிய சட்டத்திற்கமைய வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி நிருவாக விதிகள் | | | |
| | (i) அத்தியாயம் III இன் பிரிவு 32 | ஆதனவரி மதிப்பீடு சபையினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | மீள் மதிப்பீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | உரிய பிரதேச சபைச் சட்டத்திற்கமைய ஆதனவரி மதிப்பீடு மேற்கொள்ள உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| | (ii) அத்தியாயம் X இன் பிரிவு 193 | மீளாய்வாண்டிற்கான உள்ளபடியான வருமானம் மற்றும் செலவு தொடர்பான விபரங்கள் வரவு செலவுத்திட்டத்துடன் ஒப்பிடப்பட்ட போதிலும் கணிசத்தன்மையான வேறுபாட்டிற்கான காரணங்கள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டில் சமர்ப்பிக்கப்படும். | உரிய பிரதேச சபைச் சட்டத்திற்கமைய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கத்தின் நிதி ஒழுங்கு விதி | | | |
| | நிதி ஒழுங்கு விதி இல 571 | ரூபா 221,721 ஆன ஒப்பந்தகாரருக்கு மீளளிக்கப்பட வேண்டிய பிடிபணம் தொடர்பில் உரிய நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பிடிபணம் மீளளிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. | மீளளிக்க வேண்டிய வைப்புக்கள் தொடர்பாக நிதி ஒழுங்கு விதிக்கமைய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | பொது நிருவாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் சுற்றறிக்கை | | | |
| | (i) 2018.01.24 ஆம் திகதிய இல 05/2018 (1) ஐ கொண்ட சுற்றறிக்கையினால் திருத்தப்பட்ட 2008.02.06 ஆம் திகதிய இல 05/2008 | பிரசைகள்/ பயனாளிகள் சமவாயத்திற்கு ஏற்புடையதாக பொதுமக்கள் சேவைப்பட்டயம் தயாரிக்கப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டிருக்கவில்லை | பொதுமக்கள் சேவைப்பட்டயமானது தயாரித்து காட்சிப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. | உரிய சுற்றறிக்கைக்கு அமைய பொதுமக்கள் சேவைப்பட்டயம் தயாரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| | (ii) 29 திசெம்பர் 2016 இன் 30/2016 ஆம் இலக்கம் | சபையின் 03 வாகனங்களிற்கு எரிபொருள் நுகர்வுப் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | எரிபொருள் நுகர்வு பரீட்சிப்பினை மேற்கொள்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | உரிய சுற்றறிக்கைக்கு அமைய எரிபொருள் நுகர்வு பரீட்சிப்பு மேற்கொள்ள உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (உ) | ஏனைய சுற்றறிக்கை | | | |
| | 2018.07.19 ஆம் திகதிய 2018/e உள்ளூராட்சி – 01 ஆம் இலக்க உள்ளூராட்சி சுற்றுநிருபம் | பிரசைகளுக்கு இணையத்தின் மூலமாக சேவைகளை பெறுவதற்கான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. | இணையத்தின் மூலம் மக்களுக்கான சேவைகளினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய சுற்றறிக்கைக்கு அமைய பிரசைகளுக்கு இணையத்தள சேவைகளை பெறுவதற்கான வசதிகளை ஏற்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 7,905,030 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 3,565,468 ஆக அமைந்திருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான மூலம் | 2019 | | | 2018 | | |
|---|---|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலமைக்கூற்றின் படி நிலுவைகள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலமைக்கூற்றின் படி நிலுவைகள் |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | - | 250 | - | - | - | - |
| வாடகைகள் | 2,776,400 | 2,948,555 | 37,568 | 2,921,300 | 2,233,867 | 8,000 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 540,555 | 479,295 | - | 451,650 | 448,762 | - |
| ஏனைய வருமானம் | 48,196,898 | 44,595,588 | - | 44,502,876 | 37,565,500 | 47,450 |
| | 51,513,853 | 48,023,688 | 37,568 | 47,875,826 | 40,248,129 | 55,450 |

#### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 40,248,129 ஆக இருந்த போதிலும் 2019 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 48,023,688 ஆக அதிகரித்துள்ளமையால் 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2019 ஆம் ஆண்டில் வருமான சேகரிப்பின் செயலாற்றல் ரூபா 7,775,559 இனால் அதிகரிக்கப்பட்டிருந்தது. எனினும் வருமானத்தினை பட்டியலிட சபை தவறியிருந்தது. | குறித்துக்கொள்ளப்பட்டது. | பட்டியல்படுத்தப்பட்ட வருமானம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |

### 2.2.3 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்

#### (அ) நீதிமன்ற தண்டப்பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 147,016 ஆன நீதிமன்ற தண்டப்பணம் பெறப்பட வேண்டியிருந்தன. | நீதிமன்ற தண்டப்பண நிலுவையினை அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. | நீதிமன்ற தண்டப்பண நிலுவையினை உரிய காலப்பகுதியில் அறவிடுவதற்கு சபையினால் உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

#### (ஆ) முத்திரைக்கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 324,500 ஆன முத்திரைக் கட்டணங்கள் பெறப்பட வேண்டியிருந்தன. | முத்திரைக்கட்டண நிலுவையினை அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. | முத்திரைக்கட்டண நிலுவையினை உரிய காலத்தில் அறவிடுவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம், பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வழிகள், மற்றும் மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

#### (அ) உப விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 ஆம் பிரிவின் பிரகாரம், 30 முக்கிய விடயங்கள் தொடர்பில் உப விதிகள் உருவாக்கப்பட்டிருக்கவில்லை. | துணை விதி தயாரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது. | பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் உப விதிகளை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### (ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சபையினால் செயல்படுத்தப்பட்டிருக்க வேண்டிய செயற்பாடுகள் தொடர்பில் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | உபவிதிக்கமைய வருடாந்த செயல் நடவடிக்கைத்திட்டம் தயாரிக்கப்பட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### (இ) செயற்பாடுகளின் செயலாற்றலில் தாமதம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| ரூபா 1,366,000 ஆன 06 வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் உரிய காலத்தில் நிறைவேற்றப்படாமை அவதானிக்கப்பட்டது. | உரிய காலத்தில் நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வேலைகளை நிறைவு செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### (ஈ) திண்மக் கழிவு முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- |
| (i) | 2019 ஆம் ஆண்டு திண்மக்கழிவகற்றல் செலவினமாக ரூபா 767,007 செலவு செய்யப்பட்ட போதிலும் திண்மக்கழிவகற்றல் நடவடிக்கைகள் பிரதேச சபையினால் வினைத்திறனாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | திண்மக்கழிவகற்றல் வினைத்திறனாக எதிர்வரும் காலங்களில் மேற்கொள்ளப்படும் | சபையினால் திண்மக்கழிவகற்றல் செயற்பாடுகள் வினைத்திறனாக மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ii) | திறந்த வாகனங்களில் குப்பைகள் சேகரிக்கப்படுவதால் வீதி வழியே குப்பைகள் கொட்டி செல்லப்படுகின்றது. | மூடிய கழிவகற்றல் வாகனங்கள் காணப்படாமையினால் மூடிய வாகனங்களைப் பயன்படுத்த முடியாதுள்ள போதிலும் வினைத்திறனான வகையில் கழிவகற்றல் மேற்கொள்ளப்படுகின்றது. | திண்மக்கழிவு சேகரித்தலின் போது உரிய பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | திண்மக்கழிவு பணிகளில் ஈடுபடுத்தப்படும் சுகாதாரத் தொழிலாளர்களுக்கு காலத்திற்கு காலம் மேற்கொள்ள வேண்டிய மருத்துவ பரிசோதனைகள் பிரதேச சபையினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இனிவரும் காலங்களில் மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | சுகாதாரத் தொழிலாளர்களுக்கான மருத்துவ பரிசோதனைகள் பிரதேச சபையினால் உரிய காலத்தில் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

**(உ) சுற்றுச்சுழல் பிரச்சினை**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கொசுக்கள் நுளம்புகள் பரவுவதனை தடுப்பதற்காக கொசு எண்ணெய் அடித்தல் மற்றும் துர்நாற்றத்தை தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | நுளம்புகள் பரவுவதனை தடுப்பதற்கான நடவடிக்கைகள் செயற்படுத்தப்படும். | சுற்றுச்சூழலை பாதுகாக்க உரிய நடவடிக்கைகள் சபையினால் எடுக்கப்படல் வேண்டும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | சபையில் உள்ள 16 மயானங்களிற்கு அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் மயானவரி அறவிடப்பட்டிருக்கவில்லை. | மயான வரி அறவீடு மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | மயான வரிகளை அறவிட உரிய நடவடிக்கைகள் சபையினால் எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | வீதவரி மதிப்பீடு பிரதேச சபையினால் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மதிப்பீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | வீதவரி மதிப்பீட்டு நடவடிக்கைகள் சபையினால் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | பிரதேச சபையானது பொதுமக்கள் சேவை பட்டயத்தினை காட்சிப்படுத்தியுள்ள போதும் அதில் குறிப்பிடப்பட்டதற்கு முரணாக மக்களுக்கு வழங்கப்பட்ட சேவைகள் காலம் தாழ்த்தியே வழங்கப்பட்டிருந்தது. | தேவையான தகவல்கள் மற்றும் ஆவணங்களினை உரிய முறையில் சமர்ப்பிக்கப்படாத நிலையில் மட்டுமே சேவைகள் வழங்குவதில் காலதாமதம் ஏற்படுகின்றது. | பொதுமக்களிற்கு வழங்கப்பட வேண்டிய சேவைகள் உரிய காலத்தில் வழங்கப்படல் வேண்டும். |

### 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சபையானது உரியவாறு மனித வளத்தைப் பெற்று ஈடுபடுத்தாமையினால் அத்தகைய 20 மனித வளங்களினால் நிறைவேற்றப்பட வேண்டிய சேவைகள் தாமதமடைந்துள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டிருந்தது. | ஆளணி வெற்றிடங்கள் நிரப்பப்படும். | பதவி வெற்றிடங்களை உரிய காலத்தில் நிரப்புவதற்கு உரிய நடவடிக்கைகள் சபையினால் எடுக்கப்படல் வேண்டும். |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.4.1 பராமரிப்பு மற்றும் திருத்தங்களினை மேற்கொள்ளாமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சபையினால் பயன்படுத்தப்படுகின்ற 09 வாகனங்கள் திருத்தம் செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | உரிய நடவடிக்கை எடுக்கப்படும். | வாகனத் திருத்தங்களை மேற்கொள்ள உரிய நடவடிக்கைகள் சபையினால் எடுக்கப்படல் வேண்டும். |

#### 3.4.2 சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- |
| (அ) | கூட்டுமொத்தம் ரூபா 50,070,600 பெறுமதியான 22 ஆதனங்கள் பிரதேச சபைக்கு பாராதீனப்படுத்தப்பட்டிருக்கவில்லை | பராதீனப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. | ஆதனங்களின் உரிமையினை சபையின் பெயருக்கு பராதீனப்படுத்தப்பட உரிய நடவடிக்கைகள் சபையினால் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | பிரதேச சபைக்கு சொந்தமான 04 வாகனங்கள் சபையின் பெயருக்கு உரிமை மாற்றப்பட்டிருக்கவில்லை. | உரிமை மாற்றம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. | வாகனங்களின் உரிமையினை மாற்றுவதற்கு நடவடிக்கைகள் சபையினால் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 3.4.3 விளைவற்ற சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | சபைக்குச் சொந்தமான தேவரதம் படகு 05 வருட காலமாக பயன்பாடின்றிக் காணப்படுகின்றது. | படகினை பதிவு செய்யவோ பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யவோ முடியாதுள்ளது. | பயன்படுத்தப்படாத படகினை பயன்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் சபையினால் எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | சபைக்குரித்தான நவீன சந்தை கடைத்தொகுதியின் 23 கடைகள் வாடகைக்கு கொடுக்கப்படாது பயன்பாடற்றுக் காணப்படுகின்றது. | குறித்த வர்த்தக நிலையங்களினை வாடகைக்கு பெற்றுக் கொள்ள எவரும் கேள்வி கோரவில்லை. | கடைகளை வாடகைக்கு வழங்குவதற்கு உரிய நடவடிக்கைகள் சபையினால் எடுக்கப்படல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீண்டுவரும் செலவினத்தின் பாதீட்டு செலவினத்திற்கும் உண்மை செலவினத்திற்கும் இடையே கணிசத்தன்மையான வேறுபாடுகள் காணப்படுவதனால் இது செலவின பாதீட்டின் வினைத்திறனற்ற தன்மையை வெளிப்படுத்துகின்றது. | பதில் தரப்படவில்லை. | பாதீட்டினை சரியான முறையில் திட்டமிடுவதற்கான உரிய நடவடிக்கைகள் சபையினால் மேற்கொள்ளப்படல் வேண்டும். |